# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2006 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, இலங்கைச் செயல்நுணுக்கக் கல்வி நிறுவக (திருத்தச்) சட்டம்

---

*(2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2006, செத்தெம்பர் மாதம் 29 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** *II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 12.25** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2006 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, இலங்கைச் செயல்நுணுக்கக் கல்வி நிறுவக (திருத்தச்) சட்டம்**

[2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ.- ஓ 22/2006
4895

**2000 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, இலங்கைச் செயல்நுணுக்கக் கல்வி நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம் 2006 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, இலங்கைச் செயல்நுணுக்கக் கல்வி நிறுவக (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2000 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கச் சட்டத்திற்கான விரிவுப் பெயரைத் திருத்துதல்.

**2.** இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும் 2000 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, இலங்கைச் செயல்நுணுக்கக் கல்வி நிறுவகச் சட்டத்திற்கான விரிவுப்பெயர் "இலங்கை செயல்நுணுக்கக் கல்வி நிறுவகத்தைத்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் செயல்நுணுக்கக் கல்வி நிறுவகத்தைத்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"இலங்கைச் செயல் நுணுக்கக் கல்வி நிறுவகம்" என்பது "லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் செயல் நுணுக்கக் கல்வி நிறுவகம்" என அறியப்படுதல்.

**3.** (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்திலும் இலங்கைச் செயல்நுணுக்கக் கல்வி நிறுவகம் என்னும் சொற்கள் இடம்பெறும் இடங்களிலெல்லாம் அவற்றிற்காக "லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் செயல் நுணுக்கக்கல்வி நிறுவகம்" என்னும்சொற்கள் இடப்படுதல்வேண்டும்.

(2) ஏதேனும் எழுத்திலான சட்டத்தில், அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில் அல்லது வேறு ஆவணத்தில் "இலங்கைச் செயல்நுணுக்கக் கல்வி நிறுவகம்" பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும் "லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் செயல்நுணுக்கக் கல்வி நிறுவகம்" பற்றிய குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"நிறுவகத்தின் முகாமைச் சபை.

3. (1) நிறுவகமானது (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) முகாமைச் சபையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அதற்கு நிறுவகத்தின் அலுவல்களின் நிர்வாகமும் முகாமைத்துவமும் பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும். சபையானது சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு நிறுவகத்தின் தத்துவங்களையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும் வேண்டும்.

(2) சபை பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் ; இவர் தவிசாளராதல் வேண்டும் ;

(ஆ) பாதுகாப்பு, ராஜதந்திரம், சர்வதேச உறவுகள், சட்டம், தேசிய பாதுகாப்பு, பொருளியல், சூழல், விவசாயம் ஆகிய துறைகளில் புகழ் எய்தியுள்ள ஆட்களிடையேயிருந்து வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஏழு ஆட்கள்.

(3) அமைச்சர், முதல் முகாமைச்சபை தொடர்பில் காலஞ் சென்ற லக்ஷ்மன் கதிர்காமரின் குடும்ப உறுப்பினர் ஒருவரை நியமிக்கலாம். குடும்ப உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்பட்ட ஆள், சபையின் ஆயுட்கால உறுப்பினர் ஒருவராக சேவையாற்றுதல் வேண்டும்.

(4) சபைக்கு நியமனங்களைச் செய்கையில், அமைச்சர், அவ்வாறு செய்வது உசிதமானதெனக்

கருதுமிடத்து, (3) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி சபைக்கு நியமிக்கப்பட்ட காலஞ்சென்ற லக்ஷ்மன் கதிர்காமரின் குடும்ப உறுப்பினரைக் கலந்தாலோசிக்கலாம்.

(5) இச்சட்டத்திற்கான அட்டவணையின் ஏற்பாடுகள் சபை உறுப்பினர்களின் நியமனம், பதவிக்காலம், அத்தகைய உறுப்பினர்களுக்கு செலுத்தப்படற்பாலதான வேதனம், சபையின் கூட்டங்கள் அத்துடன் நிறுவகத்தின் இலச்சினை என்பன தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாகத்தின் 4 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

*"நிறுவகத்தின் பணிகள்.*

4. நிறுவகமானது -

(அ) (i) குறிப்பாக பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு, சட்டம், பொருளியல், கலாசார உறவுகள், விவசாயம் அத்துடன் சூழல் உட்பட்ட இலங்கையின் செயல்நுணுக்க அக்கறைகள் பற்றிய கற்கைக்கும் இலங்கையின் சர்வதேச உறவுகளின் கற்கைக்கும் அர்ப்பணிக்கப்பட்டதும் ; அத்துடன்

(ii) சமாதானத்தை ஊக்குவிப்பதிலும் போராட்டத்தையடுத்து வரும் பிரச்சினைகளுக்குக் கவனம்செலுத்துவதிலும் ஈடுபட்டுள்ள,

பல்துறை ஆராய்ச்சி நிறுவகமொன்றாகப் பணியாற்றுதல் வேண்டும் ;

(ஆ) பாதுகாப்பு, தேசிய பாதுகாப்பு, சட்டம், பொருளியல், கலாசார உறவுகள், விவசாயம் அத்துடன் சூழல் தொடர்பான தகவல் உட்பட சர்வதேச உறவுகள் மற்றும் செயல்நுணுக்கக் கற்கைகள் தொடர்பில் சர்வதேச உறவுகளுடன் தொடர்புடைய தேசிய கொள்கை

களை வகுப்பதற்கும், உருவமைப்பதற்கும் ஆன அடிப்படையொன்றாக தேவைப்படுத்தப்படக்கூடிய விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்திற்குத் தகவலும் தரவுகளும் வழங்குதல் வேண்டும் ;

(இ) செயல்நுணுக்கக் கற்கைகளிலும் சர்வதேச உறவுகளிலும் அவை இலங்கையுடன் தொடர்புபட்டிருக்கும் அளவுக்கு ஆராய்ச்சியை ஊக்குவித்தலும் உதவுதலும் ; அத்துடன் அத்தகைய ஆராய்ச்சியையும் கற்கைகளையும் பொறுப்பேற்கும் ஆளணியினரின் பயிற்சிக்கு வசதியளித்தலும் வேண்டும்;

(ஈ) செயல்நுணுக்கக் கற்கைகளிலும் சர்வதேச உறவுகளிலும் அவை இலங்கையுடன் தொடர்புபட்டுள்ள அளவுக்கு அவற்றைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும், ஆராய்ச்சியை மதிப்பீடு செய்வதற்கும் களம் ஒன்றை வழங்குதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விடயங்கள் பற்றி பிராந்தியத்தினுள்ளும் சர்வதேச ரீதியிலும் கூட்டுக் கற்கைகளையும் கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் கொண்டுநடாத்த வசதியளித்தல் வேண்டும் ;

(உ) செயல்நுணுக்கக் கற்கைகளுக்கும் சர்வதேச உறவுகளுக்கும் அர்ப்பணிக்கப்பட்ட நூலகம் ஒன்று உட்பட தகவல் காப்பகம் ஒன்றைத் தாபித்தலும், அத்துடன் அவை தொடர்பான இயைபானதும் நம்பகமானதுமான தகவல் கிடைப்பதற்கு வசதியளித்தலும் வேண்டும் ;

(ஊ) நிறுவகத்தின் செயலாட்சியின் எல்லைக்குட்பட்ட விடயங்கள் பற்றிய சஞ்சிகைகளையும், கட்டுரைகளையும் வெளியிடுதல் வேண்டும் ;

(எ) இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் உள்ள இதனையொத்தக் குறிக்கோள் களையுடைய தனியாட்களுடனும், கழகங்களுடனும், அரசாங்க, அரசாங்க சார்பற்ற நிறுவனங்களுட னும் உறவுகளையும் இணைப்புகளை யும் பேணுதல் வேண்டும் ;

(ஏ) இராஜதந்திரத்திலும் சர்வதேச உறவு களிலும் அத்துடன் தோதானதென சபை கருதுகின்ற சார்புடைய வேறு ஏதேனும் துறையிலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் வேண்டும் ;

(ஐ) நிறுவகத்தின் பணிகளைப் புரிகையில் அவசியமாகக்கூடியவாறான அத்த கைய வேறு செயல்களையும், விடயங் களையும் செய்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்து வதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(அஅ) நிறுவகத்தின் நோக்கத்திற்கு ஏதேனும் பிணைப் பொறுப்பின்மீது அல்லது வேறுவகையில் பணம் திரட்டுதல் அல்லது கடனெடுத்தல் அத்துடன் சபையினால் தகுந்ததெனக் கருதப்படும் அத்த கைய விதத்தில் நிறுவகத்தின் ஏதேனும் தனிசை அல்லது கடப்பாட்டைப் பெறுதல் அல்லது நிறை வேற்றுதல் ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"நிறைவேற்றுப் பணிப்பாளர்.

6. (1) நிறுவகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒருவர் இருத்தல் வேண்டும். சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகள்மீது, (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்படும் தேவைப்பாடுகளைக் கொண்ட ஆளொருவரை சபையானது நிறைவேற்றுப் பணிப்பாளராகத் தொழிலுக்கமர்த்துதல் வேண்டும்.

(2) நிறைவேற்றுப் பணிப்பாளர் முகாமைத்துவத்துறையில் விசேடத்துவம் பெற்றுள்ளவரும் செயல்நுணுக்கக் கற்கைகள் மற்றும் சர்வதேச உறவுகள் தொடர்பில் கணிப்புப்பெற்ற ஆற்றலுடையவருமான ஆளொருவராக இருத்தல் வேண்டும்.

(3) நிறைவேற்றுப் பணிப்பாளர், சபையின் தற்றுணிபிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைய, பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும் வேண்டும் :-

(அ) நிறுவகத்தை முகாமைசெய்தலும் நிர்வகித்தலும் ;

(ஆ) நிறுவகத்தின் ஆளணியினரைத் தொழிலுக்கமர்த்துதல் தொடர்பான எல்லா அம்சங்களையும் நிறைவேற்றுதல் ;

(இ) சபையின் முடிபுகளை நடைமுறைப்படுத்துதல் ;

(ஈ) சபையால் பணிக்கப்பட்டவாறு, நிறுவகத்தின் நலன்களை இலங்கையிலும் வெளிநாட்டிலும் ஊக்குவித்தலும் முன்னெடுத்துச் செல்லுதலும் ; அத்துடன்

(உ) சபையால் காலத்துக்குக்காலம் குறித்தொதுக்கப்படக்கூடியவாறான நிறுவகத்தின் நிருவாகம் அத்துடன் முகாமையுடன் தொடர்புடைய அத்தகைய வேறு எல்லாப் பணிகளும்.

(4) நிறைவேற்றுப் பணிப்பாளர், சபையின் உறுப்பினரொருவராக இருத்தலாகாது, ஆனால் அவ்வாறிருக்குமாறு சபையால் வேண்டுகோள் விடுக்கப்படின் சபையின் ஏதேனும் கூட்டத்திற் சமுகமாயிருக்கலாம். நிறைவேற்றுப் பணிப்பாளர் சபை முன்னரான ஏதேனும் விடயத்தின்மீது வாக்களிக்க உரித்துடையவராதலாகாது.

(5) சபை அதன் தத்துவங்களுள் எவற்றையும் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு அல்லது ஏதேனும் குழுவுக்குக் கையளிக்கலாம் என்பதுடன், அத்தகைய ஏதேனும் கையளிப்பைக் காலத்துக்குக்காலம் இல்லாது ஒழிக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(ஈ) சபையால் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து உறப்பட்ட வருமானமாகக் கிடைக்கப்பெறக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(உ) உறுப்பினர்களிடமிருந்து உறுப்பாண்மைக் கட்டணங்களாகக் கிடைக்கப்பெறக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(ஊ) நிறுவகத்தால் நடத்தப்படும் எவையேனும் கற்கைநெறிகளுக்கான கொடுப்பனவாகப் பெறக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 10அ, 10ஆ, 10இ, 10ஈ அத்துடன் 10உ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.*

**9.** பின்வரும் புதிய பிரிவுகள் முதன்மைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவை உடனடுத்து உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 10அ, 10ஆ, 10இ, 10ஈ அத்துடன் 10உ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*சர்வதேச மதியுரைப் பேரவை.*

10அ. சபையானது (இதனகத்துப்பின்னர் "பேரவை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சர்வதேச உறவுகள் மதியுரைப் பேரவை எனப் பெயர்கொண்ட பேரவையொன்றை நியமித்தல் வேண்டும். இது பாதுகாப்பு, இராஜதந்திரம், சர்வதேச உறவுகள்,

சட்டம், தேசிய பாதுகாப்பு, பொருளியல், விவசாயம் மற்றும் சூழல் தொடர்பான துறைகளில் சர்வதேசப் புகழ் எய்தியுள்ள ஐந்து ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும். பேரவை ஒன்றில் அதன் சொந்த விருப்பத்தின்பேரில் அன்றேல் சபையால் அவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்படும் போது நிறுவகம் சார்ந்த விடயங்கள்மீது சபைக்கு மதியுரை வழங்குதல் வேண்டும்.

*குழுக்களின் நியமனம்.*

10ஆ. சபையானது, அதன் எவையேனும் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கு, நிறைவேற்றுவதற்கு அல்லது புரிவதற்கு அவசியமானதென அது கருதக் கூடியவாறு நிலையியற் குழுக்களையும், வேளைக் கமைந்தவையான குழுக்களையும் நியமிக்கலாம், அத்தகைய குழுக்கள் சபையின் உறுப்பினரல்லாத ஆட்களையும் கொண்டிருக்கலாம்.

*நிறுவகத்தின் உறுப்பாண்மை.*

10இ. (1) சபையானது, உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளப்படுவதற்குப் பொருத்தமான வர்கள் என கருதுகின்றவாறான அத்தகைய ஆட்களைக் காலத்துக்குக்காலம் நிறுவகத்தின் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளலாம்.

(2) சபையானது, உறுப்பாண்மைக்கான கட்டளைக்கல், உறுப்பாண்மையின் வெவ்வேறு வகுப்புக்கள் வகுதிகள், (கௌரவ உறுப்பினர்களும் இணை உறுப்பினர்களும் உட்பட), உறுப்பினர்கள் சேர்த்துக்கொள்ளப்படும்முறையும், விதமும், உறுப்பினர்களால் செலுத்தப்படவேண்டிய கட்ட ணங்களின் கட்டமைப்பு, வாக்களிக்கும் உரிமை உட்பட உறுப்பினர்களின் உரிமை, ஒவ்வொரு வகுப்பையும் அல்லது வகுதியையும் சேர்ந்த உறுப்பினர்களின் கடப்பாடுகள் அத்துடன் ஆட்கள் நிறுவகத்தின் உறுப்பாண்மையிலிருந்து இல்லா தொழியும் முறை என்பவற்றை எடுத்துரைக்கும் விதிகளை ஆக்குதல் வேண்டும்.

(3) நிறுவகத்தின் எந்த உறுப்பினர் நிறுவகத்தின் நலன்களைப் பங்கப்படுத்தும் முறையொன்றில் அல்லது அதற்கு முரணாகச் செயற்பட்டுள்ளார் என சபை கருதுகின்றதோ அந்த உறுப்பினர் ஒருவருக்கெதிராக சபை தோதானதெனத் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய நடவடிக்கையை எடுக்கலாம்.

*சபை விதிகளை ஆக்குதல்.*

10ஈ. சபை, சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் விடயம் அல்லது எவையேனும் விடயங்கள் தொடர்பில் விதிகளை ஆக்கலாம். சபை அத்தகைய விதிகளை திருத்தலாம், மாற்றலாம் அல்லது நீக்கலாம் என்பதுடன், எந்நேரத்திலும் புதிய விதிகளையும் ஆக்கலாம். விதிகள் நிறுவகத்தின் உறுப்பினர்களைப் பிணிப்பவையாதல் வேண்டும். சபையால் ஆக்கப்படும் விதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திரப் பயிற்சி நிறுவகமானது லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் செயல் நுணுக்கக் கற்கைகள் நிறுவகத்திற்கு உரித்தாக்கப் படுதல்.*

10உ. (1) பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திரப் பயிற்சி நிறுவகம் (ப.ச.இ.ப.நி.) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து, லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் செயல் நுணுக்கக் கற்கைகள் நிறுவகத்திற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் வேறு கற்கைநெறிகளையும் நடத்துவதற்குப் பொறுப்பான நிறுவகத்தின் கூறாகப் பணியாற்றுதலும் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கியதிலிருந்தும் அதன் பின்னரும் -

(i) பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திரப் பயிற்சி நிறுவகத்தின் வரவிற்கு, இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முந்திய தேதியன்று அத்தகைய நிறுவகத்தால் பேணப்படுவதும் தொழிற்படுத்தப்படுவதுமான ஏதேனும் கணக்கில் இருக்கின்றவாறான அத்தகைய

எல்லாப் பணத்தொகைகளும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் 9 ஆம் பிரிவால் தாபிக்கப்படும் நிறுவகத்தின் நிதியத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும் ;

(ii) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு உடன் நேர்முந்திய தேதியன்று பண்டார நாயக்க சர்வதேச இராஜதந்திரப் பயிற்சி நிறுவகத்தின் தொழிலிலிருப்பவர்களான அத்தகைய அலுவலர்களும் சேவையாளர்களும், நிறுவகத்தால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறு, இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் அவர்கள் தற்பொழுது துய்க்கும் நியதிகளுக்குக் குறையாதளவு சாதகமான நியதிகளின்மீது நிறுவகத்தின் அலுவலர்களாகவும் சேவையாளர்களாகவும் கருதப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 16அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

*"தீர்வைகள் முதலியவற்றின் கொடுப்பனவிலிருந்து நிறுவகம் விலக்களிக்கப்படுதல்.*

16அ. அமைச்சர், செயல்நுணுக்கக் கற்கைகள் மற்றும் சர்வதேச உறவுகள் தொடர்பிலான துறைகளில் கற்கைக்கும் ஆராய்ச்சிக்கும் வசதியளிப்பதற்காக, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஒருப்பாட்டுடன் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நியதிகளில் அல்லது விடயத்திற்கேற்ப எவையேனும் தீர்வையின், இறுப்பனவின் அல்லது வரியின் விதிப்பனவை ஆளும் அப்போதைக்கு வலுவிலுள்ள எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் நியதிகளில் அனுமதிக்கப்பட்டவாறான அத்தகைய அளவுக்கு, நிறுவகத்தின் வருமானம் அல்லது இலாபங்கள்மீது அத்தகைய எவையேனும் தீர்வைகளின், இறுப்பனவுகளின் அத்துடன் ஏதேனும் வரியின் கொடுப்பனவிலிருந்து நிறுவகத்திற்கு விலக்களித்தல் வேண்டும்.".

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தில் "சனாதிபதி" மற்றும் "பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களில் முறையே "சனாதிபதி" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "வெளிநாட்டலுவல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்" என்னும் சொற்களும் "பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நிறைவேற்றுப் பணிப்பாளர்" என்னும் சொற்களும் இடப்படுதல் வேண்டும். *முதன்மைச் சட்டவாக்கத்திற்கான பொதுவான திருத்தம்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- *முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணையைத் திருத்துதல்.*

(1) அவ்வட்டவணையின், 1 ஆம் விடயத்தின் (அ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்வதன்மூலமும் ; அத்துடன்

(2) அவ்வட்டவணையின் 5 ஆம், 6 ஆம் விடயங்களில் "3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

**13.** ஐயப்பாட்டைத் தவிர்ப்பதற்கு, இச்சட்டத்தால் தாபிக்கப்பட்ட "லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுகள் மற்றும் செயல் நுணுக்கக் கற்கைகள் நிறுவனம்" எல்லா நோக்கங்களுக்காகவும் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவால் தாபிக்கப்பட்ட "இலங்கை செயல்நுணுக்கக் கல்வி நிறுவகச் சட்டத்தைப்" பின்னுறுவதாக இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது. *காப்பு வாசகம்.*

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் சபை உறுப்பினரொருவராக நியமிக்கப்பட்டவரும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு உடன்முன்னரான நாளன்று சபையின் உறுப்பினரொருவராகப் பதவிவகிப்பவருமான ஒவ்வோராளும், முதன்மைச் சட்டவாக்கத்தில் எது எவ்வாறிருப்பினும், இச்சட்டம் தொடங்கும் தேதியன்று பதவிவகிக்காதொழிதல் வேண்டும். *சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னரான நாளன்று பதவி வகிக்கும் சபை உறுப்பினர்கள் அத்தகைய பதவி வகியா தொழிதல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்